## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. O.S.No.146/2021

Prosecution witness for P.W. 2.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு.லெட்சுமணப்பெருமாள் | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.12.2024.

முதல் விசாரணை

நான் தற்போது சொக்கப்பழங்கரையில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். வா.சா.ஆ 8 தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் நான் முதல் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளேன். அந்த பத்திரத்தை வாதிக்கு அவரது தாயார், தங்கைகளான 2 முதல் 5 பிரதிவாதிகள் 24.07.2019 ல் எழுதிக் கொடுத்தார்கள். அந்த பத்திரம் ஏரல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அருகில் பத்திர எழுத்தர் அலுவலகத்தில் பத்திரம் எழுதப்பட்டது. பத்திரம் எழுதுவதற்கு பத்திர எழுத்தருக்கு வாதியின் தாயாரும், சகோதரிகளுமான 2 முதல் 5 பிரதிவாதிகள் தகவல் சொன்னார்கள். பத்திர எழுத்தர் ஆவணத்தை படித்துக் காட்டினார். அதை 2 முதல் 5 பிரதிவாதிகள் சரியாக இருப்பதாக ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்கள். அவர்கள் கையொப்பமிட்டதை நான் பார்த்தேன். அதற்கு பின்னிட்டு நான் முதல் சாட்சியாக கையொப்பமிட்டேன். அதை 2 முதல் 5 பிரதிவாதிகள் பார்த்தார்கள். பின்னிட்டு 2வது சாட்சியான உத்திரகுமார் கையொப்பமிட்டார். அவர் 2 முதல் 5 பிரதிவாதிகள் கையொப்பமிட்டதை பார்த்தார். அவர் சாட்சி கையொப்பமிட்டதை 2 முதல் 5 பிரதிவாதிகள் பார்த்தார்கள். பின்னிட்டு

மேற்படி ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

வாதியை எனக்கு 20 ஆண்டுகளாக தெரியும். வாதி என் குடும்ப நண்பர். நான் பதிவாளர் அலுவலகத்திலும், பத்திர எழுத்தர் அலுவலகத்திலும் கையொப்பமிட்டேன். எந்த எந்த சொத்து யார் யார் பெயரில் எழுதப்பட்டது என்பது எனக்கு தெரியும். வாதியின் தகப்பனார் தனது மூன்று பெண் பிள்ளைகளுக்கு சொத்தை எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ 8–ஐ பத்திர எழுத்தார் படித்துக் காட்டினார். வாதி என் குடும்ப நண்பர் என்பதால் அவருக்கு சாதகமாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிதான் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார். 2ம் பிரதிவாதிக்கு சுமார் 70 வயதிருக்கும். 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கும், வாதிகளுக்கும் பிரச்சனை இல்லை. 1ம் பிரதிவாதிக்கும், வாதிக்கும்தான் பிரச்சனை. 1ம் பிரதிவாதியின் உரிமையை ஏமாற்றுவதற்காக வாதியும், நானும், 2 முதல் 5 பிரதிவாதிகளும் கூட்டு சேர்ந்து கொண்டு வா.சா.ஆ 8 பத்திரத்தை உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல.

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2024.12.10 19:18:02 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.